உ



அமரர்

# திருமதி.வயிரவிப்பிள்ளை சின்னம்மா

அவர்களின் பிரிவு குறித்த 45ம் நாள்

# நினைவுச் சரம்

**19.01.2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

யா/தென்மராட்சி உசன் மிருசுவிலைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாககவும்
கொண்டு வாழ்ந்து எம்மை அன்புடன்
பெற்று வளர்த்து ஆதரவு நல்கிய எம்
அன்புத்தெய்வம் அன்னை வயிரவப்பிள்ளை
சின்னம்மா அவர்கள் 06-12-2005 அன்று
இறையடி சேர்ந்தார்.

அன்னாரின் ஆத்மா
இறையடி சேர்ந்து நித்தியப் பேரானந்தம்
பெறுகவென அருள்மிகு உசன் முரகப்
பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து
அவ்விறைவன் பாதாரவிந்தங்களிற்கு இம்
மலரைக் காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றோம்.

உசன்,
மிருசுவில்.

பிள்ளைகள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் நல்வண்ணம் வாழ்ந்து
விண்ணகம் சென்றிட்ட அன்னை
எங்கள் அன்புத்தெய்வம்

மண்ணில்
26
11
1927



விண்ணில்
06
12
2005

## திதி வெண்பா

ஆண்டு பார்த்திப ஆனதொரு மார்கழி ஆறில்
பூண்ட நல் பூர்வபக்க வுஷ்டிதிதியதனில் போயணைந்தார்-நீண்டபுகழ்
சீர் மேவும் உசன்பதி வாழ் உத்தமி சின்னம்மா
சிவனது பொற்பதம் தன்னில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்சபுராணம்

## தேவாரம்

தந்தையார் போயினார் தாயாரும்
போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண் டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம்
வைத்தியால் ஏழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்ய லாம்
மையல் கொண் டஞ்சல் நெஞ்சே

## திருவாசகம்

உற்றாரை நான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவு மினியமையுங்
குற்றாலத் தமர்துறையுங் கூத்தாகவும் குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பானித் தெருவே
ஐயா நியுலாப் போந்தவன்று முதலின்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ வருள் கோடைத்திரை போக்கிய சுந்தரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொரு நான் முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தோரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல் புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின்கீ ழிருக்க" என்றார்

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல் பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மென வினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன் மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி பதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோ னே
முப்புரம் எரிசெய அச்சிவ னுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துய ரது கொடு சுப்பிர மணிபடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே

## திருமந்திரம்

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்ட
பேரினை நீக்கிப் பிண மென்று பேரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே

ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின் தாள் சதங்கச்சி ஏகம்பனே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலா வல்லி மாலை

வெண்டாமரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாதுகொ லோசகமேழு மளித்து
உண்டானுறங்க வொழித்தான்பித் தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பே சகலகலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும்பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே சகலகலாவல்லியே.

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன்னருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோவுளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகலகலாவல்லியே

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக்கடலே சகலகலாவல்லியே.

பஞ்சப்பிதந்தரு செய்யபொற்பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்திருந்தாய் சகலகலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற்பனுவலும்யான்
எண்ணும் பொழுதொளி தெய்த நல்காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலாவல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற் பொந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங்கலைத்தமிழ்த் தீம்பாழ் லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப்பேடே சகலகலாவல்லியே

சொல்விற்பன வுமவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுத்தந் தடிமை கொள் வாய்நளினாசனஞ் சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப்பெருஞ் செல்வப்பேறே சகலகலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலந்தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியேடரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே சகலகலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்டமன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய் வாய்படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பிலும் போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகலகலாவல்லியே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவராய சுவாமிகள் அருளிய

# கந்த சஷ்டி கவசம்

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

### நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய னடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிக்கெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் கிளரொளி யையும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ந வடிவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
கைகள் ளிரண்டும் கருணை வேல் காக்க
முன்கை யிரண்டும் முரண் வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்ரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினி நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரம் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நிண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது ஆக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரனை பரு அரையாப்பும்
எல்லாப் பிணியும் என்றெனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு றவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந் துறவாக
உன்னை துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத் துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்று அன்பாய் பிரிய மளித்து
மைந்தன் என்மீது உன்மனமகிழ்ந் தருளி
தஞ்சமென்ற அடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் ஷட்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத் துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது ஆகி
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருள்வர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர் கைவேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட்சமிக்கு விருந்து உணவாகச்
சூர பத்மாவைத் துணித்த கையதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்தாட்கொள என்றென துள்ளது
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனாதி பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்ய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

-முற்றிற்று-

## அன்னை திருமதி. வயிரவிப்பிள்ளை சின்னம்மா அவர்களின் வாழ்க்கை வரலாறு

தென்மராட்சிப்பிரிவில் தென்னையும் பனையும் தேர்ந்த கனிமரங்களும் செந்நெல் விளையும் வயல்களும் ஒருங்கே அமைந்த ஒப்பற்ற ஊர் உசன் இவ்வூர் முருகனின் அருட்கடாட்சத்தால் மக்கள் எக்குறையுமின்றி செல்வச் செழிப்போடு வாழ்வாங்கு வாழ்ந்து வருகின்றனர். அழகும், செல்வமும், கல்வியும், பக்தியும் நிறைந்த இவ்வூரிலே வல்லிபுரம் நாகமுத்து தம்பதிகளின் இரண்டாவது மகளாக சின்னம்மா பிறந்தாள். இவரின் பிறப்பால் பெற்றோரும் உற்றாரும் மிக்க மகிழ்வு எய்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கு மூத்த சகோதரி சின்னாச்சி,இளைய சகோதரியாக செல்லம்மாவும் இருந்தனர். இவர் வளர்பிறைபோல் வளர்ந்து உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றுத் தேறினார். இவர் நல்லொழுக்கமும் கீழ்ப்படிவுமுள்ள ஒரு மாணவியாக பாடசாலையில் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டார்.

காலமாற்றத்தால் கன்னிப்பருவமடைந்த சின்னம்மா அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நாற்குணமும் கொண்ட நற்பெண்ணாக வளர்க்கப்பட்டாள். திருமணப்பருவமெய்திய இவருக்கு பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தில் முகமாலை பளையைச் சேர்ந்த பல்வகைச் சிறப்புக்களும் கொண்ட திரு. சின்னக்குட்டி தம்பதிகளின் புதல்வன் வயிரவப் பிள்ளையை மணாளனாகப்பார்த்து திருமணம் செய்து வைத்தனர். திரு.வயிரவப்பிள்ளை நல்லொழுக்கமும் நற்குணமும் உடையவராக விளங்கினார்.

இல்லறவாழ்வில் இணைந்த இவர்கள் ஒருயிரும் ஈருடலுமாக வாழ்ந்து இயன்ற தானதருமங்கள் விருந்தோம்பல்கள் ஆலயக்கடமைகள் போன்றவற்றை முறை தவறாமல் செய்து வந்தனர். இவர்களின் இக்கடமைகளால் இல்லறவாழ்வு இனிமையுற வல்லிபுரம், சுப்பிரமணியம், பாலசிங்கம், கந்தசாமி, திலகவதி, சரஸ்வதி, யோகராசா என்னும் எழுவரை மக்கட்செல்வங்களாகப் பெற்றெடுத்தனர்.

பிள்ளைகள் மீது அக்கறைகொண்ட பெற்றோர்கள் கற்றோர் கண்:ணுடையார் என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க தாம் பெற்ற பிள்ளைகளிற்கு கல்வியறிவு ஊட்டினர்.

மூத்தமகன் திரு.வ.வல்லிபுரம் அவர்களைத் தம் சொந்த ஊர் பாடசாலையாகிய யா/உசன் இராமநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி கற்பதற்காக சேர்த்தனர். இவர் கல்வியில் சிறந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்று உயர் கல்வியை நெல்லியடி மத்திய கல்லூரியில் கல்விகற்று க.பொ.த. உயர்தரக் கணிதத்துறையில் சித்தியடைந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் கல்விகற்று பொறியியலாளராக வெளியேறி இலங்கையில் பொறியியலாளராகக் கடமையாற்றி தற்பொழுது மனைவி இரஜினியோடும் பிள்ளைகள் விக்கினராசா,வசீகரன் விசாலினியோடும் இலண்டனில் வசித்து வருகின்றார். இவரின் வளர்ச்சியால்

> **"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்**
> **சான்றோர் எனக்கேட்டதாய்"**

என்ற வள்ளுவர் கூற்றுக்கிணங்க மிகவும் மகிழ்ச்சி கொண்டவர் சின்னம்மா. அத்தோடு பேரப்பிள்ளைகள் இருவரும் தந்தையின் நிலைக்கு வந்ததையிட்டு மகிழ்ச்சி கொண்டவர்.

இரண்டாவது மகன் திரு.வ.சுப்பிரமணியம் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கல்விகற்றுத்தேறி "நவஜீவனம" பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பலகாலமாகக் கடமையாற்றியவர். இவர் ஸ்ரெலா யோகராணியை மணந்து பிள்ளைகள் இராஜகுமார் ஜீவகுமார், றஜீவ் ஆகியோரோடு வாழ்ந்து வருகின்றார்.

மூன்றாவது மகன் திரு.வ.பாலசிங்கம் யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கல்விகற்று இலங்கைப் போக்குவரத்துச்சபை (யாழ்ப்பாணம்) இல் தொழிநுட்பவியலாளராகக கடமையாற்றியவர் நீர்வேலியில் திருமணம் முடித்து மனைவி செவ்வராணியோடும் பிள்ளைகள் சாரூபன், சாருகா,சமீனா ஆகியோரோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து வருகின்றார்.இவர்களின் வளர்ச்சியாலும் மகிழ்வுற்றிருந்தார்.

நான்காவது மகன் திரு.வ.கந்தசாமி யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கல்விகற்று அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் எழுதுநராகக் கடமையாற்றி உரும்பிராயில் கவுதாமணி என்பவரைத்திருமணம் செய்து கஜந்தா என்ற பெண்பிள்ளையோடு அவுஸ்ரேலியாவில் வாழ்ந்து வருகிறார். இவரின் பேர்த்தியாராகிய கஜந்தா அவுஸ்ரேலியாவில் கல்வி கற்று கணக்காளராக உயர்ந்த பதவி வகித்துக்கொண்டிருக்கிறார்.இவர் இம்மாதம் திருமணம் செய்யவுள்ளார் இவற்றைக்கேள்வியுற்ற சின்னம்மா மிக்க மகிழ்ச்சியோடு இருந்தவர்.

மூத்தமகள் திலகவதி உசன் ராமநாதன் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று அம்பன் குடத்தனையைச்சேர்ந்த நற்குணாளனும் கட்டிடத்தொழிநுட்ப உத்தியோகத்தரான திரு. ச. சிதம்பரப்பிள்ளையை திருமணம் செய்து சுமித்திரா, சுமித்திரன், சுமந்தன் ஆகிய மூன்று பிள்ளைகளோடு இன்புற்றிருந்தனர். தற்பொழுது திலகவதி அவுஸ்ரேலியாவுக்கச் சென்று அங்கு வாழ்வதற்கான அனுமதியைப் பெற்றுவிட்டார். இந்நிகழ்வு சின்னம்மாவிற்கு மகிழ்ச்சியைக்கொடுத்தாலும் மூத்தமகள் தன்னருகில் இல்லையென்றும் தன் பேரர்கள் தன்னருகில் இல்லையென்ற மனக்கிலேசத்துடன் வாழ்ந்தார்.

இளையமகள் சரஸ்வதி தனது கல்வியை யா/ உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கற்று ஆசிரியராகக் கடமையாற்றிக்கொண்டிருக்கிறார். இவர் கரம்பகம் மிருசுவிலைச் சேர்ந்த நற்குணாளனான ஜெயச்சந்திரனைத்திருமணம் செய்து இன்பமாக வாழ்ந்து வருகின்றார். இவருடனே சின்னம்மா அவர்களும் வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். இவர் தாய்மீது அளவிலா அன்புடன் அவருக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்து வந்தார். அவருக்கு விரும்பிய உணவுப்பண்டங்கள் யாவற்றையும் கேட்கும் போது தயங்காமல் கொடுத்து மகள் என்ற ஸ்தானத்திலிருந்து விலகாமல் பாதுகாத்து வந்தார்.இளையமகளாகிய சரஸ்வதி இவர் மீது அன்பு கொண்டு மகிழ்வுடன் வாழ்ந்து வந்தார்.

இளைய மகன் யோகராசா யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் மின்சாரம் பொருத்துனராக பதவி வகித்து வைகுந்தராணி என்பவரை மணம்முடித்து தற்போது சுவிசில் வாழ்ந்து வருகின்றார். விஸ்ணுதன், விஸ்ணுகன், ஜகஜாளினி ஆகிய மூன்று பிள்ளைகள் உண்டு. இவரின் வளமான வாழ்வு கண்டு மகிழ்ந்தவர் சின்னம்மா.

1984 ம் ஆண்டு தனது கணவனான வயிரவப்பிள்ளை இவ்வுலக வாழ்வை முடித்துக்கொள்ள தனித்து நின்று ஏனைய பிள்ளைகளையும் திருமணம் செய்து நல் வாழ்க்கை அமைத்துக் கொடுத்தவர். சின்னம்மா தான்பெற்ற பிள்ளைகள் நல்ல நிலையில் உள்ளார்கள் என்ற மகிழ்ச்சி ஒருபுறம் எல்லாப் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் தன் அருகில் இல்லையே என்ற மனக்கவலையும் சின்னம்மாவின் மனதை மெல்ல மெல்ல வாட்டத்தொடங்கியது எதுவித குறையோ கஸ்டமோ இல்லாத இவர் வயது முதிர்ந்த காலத்தில் பிள்ளைகள் எல்லோரும் அருகில் இல்லையே என்ற குறை இருந்தது.

திருமதி வ. சின்னம்மா தன் வாழ்நாளில் சமூக சேவையிலும் ஆன்மீக சேவையிலும் சிறந்து விளங்கினார். உசன் ராமநாதன் மகாவித்தியாலய மாணவர்களுக்கு பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்ச்சி வழங்கிய பெருமையும் தூரஇடங்களிலிருந்து வந்து கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கு உணவு சமைத்துக்கொடுத்து அனுசரித்த பெருமையும் இவரைச் சாரும் அத்தோடு உசன் கந்தசாமி ஆலயத்திற்கும் கெற்பேலி தரவையம்பதி வீரபத்திரர் ஆலயத்திற்கும் அளப்பெரும் சேவையாற்றியுள்ளார்.

இவ்வாறு சீரும் சிறப்புமாக இருந்த சின்னம்மா தனது 78 வது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்து இறைபதம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

## மூத்தமகன் திரு.வ. வல்லிபுரம் (பொறியியலாளர், இலண்டன்) அவர்களின் இதயக்குமுறல்

அன்புத்தெய்வம் அம்மாவே எங்கள் அனைவரையும் காத்த அன்னையே!
குடும்ப உயர்வுக்கு குலதெய்வமே எங்கள் குண திலகமே!
இரவு பகல் பாராது எம் உயர்வுக்கு உழைத்த உத்தமியே!
எங்களைத் திடுக்கிடச் செய்து எங்கம்மா சென்றாய்?

என்னுள்ளத்தின் ஒவ்வொரு துளியையும் பலதுளிகளாக்கி
எமையெல்லாம் இந்நிலைக்குக் கொண்டு வந்து
சலனம் நீக்கி சந்தோசமாக இருக்கவேண்டிய நீ
என்னைவிட்டு ஏனம்மா பிரிந்தாய்

ஆரம்பக் கல்விகற்று அரச புலமைப்பரிசில் பெற்று
ஊர் விட்டுப் படிக்கச்செல்ல உதவிய வகையை
உயிருள்ள வரை என்னிதயம் மறவாதம்மா!
என்சுவாமியறையில் உன்படம் பார்த்து யான் ஏங்கித்தவிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது மகன் திரு.வ.சுப்பிரமணியம் அவர்களின் இதயக்குமுறல்

நித்தம் எந்தனக்கு நீராட்டி சோறூட்டி
அன்புடன் வளர்த்த அந்நாளை நினைக்கையிலே
அடிவயிறோ இன்று அனலாய் எரியுதம்மா
நாடி ஓடி வந்து நன்முகம் காட்டம்மா!

## மூன்றாவது மகன் திரு.வ. பாலசிங்கம் அவர்களின் இதயக்குமுறல்

அன்புடன் எனை வளர்த்து அறிவுதனை ஊட்டி
அரச தொழில் யான்பெற அரும்பணி பலவாற்றி
உயர்வு பெற வைத்த என் உறுதியுள்ள அம்மாவே!
பரிதவிக்கவிட்டு நீ பறந்தோடிப்போனதெங்கே?

## நான்காவது மகன் திரு.வ. கந்தசாமி (அவுஸ்ரேலியா) அவர்களின் இதயக்குமுறல்

பல்லோரும் போற்ற படித்து யான் முன்னேற
பாசமுடன் உழைத்த என் பண்புடைய தாயாரே!
அன்று யான் உனைப்பிரிந்து அன்னியநாடு வந்தேன்
இன்று யான் உனைப்பிரிந்து உலகினில் வாடுகின்றேன்.

## மூத்தமகள் திருமதி.திலகவதி சிதம்பரப்பிள்ளை (அவுஸ்ரேலியா) அவர்களின் இதயக்குமுறல்

கண்ணுக்கு இமைபோலக் காவலாய் நீயிருந்து
காத்து வளர்த்து கடமைகள் பல செய்து
கண்ணான கணவனையும் கரம்பற்றச் செய்து
பாசமுடன் என் பக்கத்தில் இருந்தாயம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னிய நாடு வர அவலம் உனை வாட்ட
அன்னையே உன்னினைவில் அமைதியாய் இருந்தேன் யான்
காற்றில் வந்த செய்திகேட்டு கதிகலங்கி யான் துடித்து
அருகிருந்து பணிசெய்யா அரும்பாவியானேன் அம்மா!

## இளைய மகள் திருமதி.சரஸ்வதி ஜெயச்சந்திரன் (ஆசிரியை) அவர்களின் இதயக்குமுறல்

இளைய மகள் என்றென்னில் இணையில்லா அன்புடன்
அறிவுதரனயூட்டி ஆசிரியை எனையாக்கி
அகமகிழ்வு கொண்டு அகிலமது தன்னில்
அளவிலா பணி செய்து அம்மாவே நீ வாழ்ந்தாய்

காலையில் நானெழுந்துன் கடமை பல செய்து
பள்ளிக்க நான் செல்ல நாளும் பாசமுடன் அனுப்பிவிடுவாய்
பாடசாலை சென்றென் பணிமுடித்து யான் வர
வாசலில் இருந்தென்னை வாஞ்சையுடன் அழைத்திடுவாய்

இணையில்லாப் பாசமுடன் இருந்தவென் அம்மாவே
பற்றுடன் அழைப்பதற்கு பாசமுடன் யாருளர்?
தாய் அன்பைப் பிரிந்து தரணியில் வாழ்வேனோ?
ஓடிவந்து நீ எனக்கு ஓர் வார்த்தை சொல்லாயோ?

## இளைய மகன் யோகராசா (யோகன்) சுவிஸ் அவர்களின் இதயக்குமுறல்

அம்மா உன் செய்தி கேட்டு உடல் தளர்ந்து நின்றேனே
அம்மா உன் மரண நிலையறிந்து மனம் தளர்ந்து போனேனே
அம்மா நீ ஏழையாக இருந்த போதும் எழுவரைக்காத்தாயே
அம்மா உனக்க எழுவர் இருந்தும் ஏன்தானோ இந்நிலை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமை உமை வாட்டிய போதெல்லாம் வாதாடி நின்றீரே
வசந்தமெங்கும் வாடியபோதுவாடிச்சோர்ந்ததுதான் மர்மமம்மா
வாழப்பிறந்தவர்கள் வையத்துள் வாழ்ந்து இறப்பது இயல்பு அம்மா
வாழ்வாங்கு வாழ்ந்தபின்பு இயல்புக்க மாறியதே என்னை வாட்டுதம்மா

உன் இளமையில் இது நடந்திருந்தால்
உலகம் இதுதான் என்று கழித்திடுவேன்
உன் வலு இழந்த வேளையில் நடந்ததினால்
உள்ளம் உள்ளவரை எனக்கு இது கண்ணீரம்மா

ஒன்றல்ல இரண்டல்ல உன்னினைவு எனக்கு
ஒரு கோடி உண்டு அம்மா
எண்ணி அழுகின்றேன் இங்குஒரு நாளும் ஓய்வின்றி
இரவு பகல் பாராதுழைத்தாய் உன் பிள்ளை ஒரு நிலையடைய
வேண்டுமென்று

அன்றைய உன் உழைப்பை மனம் எண்ணுகின்றதே
அன்றைய உந்தன் உணவின் சுவை நாவில் தெரிகிறதே
அன்று நீ சொன்ன வார்த்தைகள் காதில் ஒலிக்கின்றதே
இன்று அம்மா என்ற நீர் நிர்க்கதியானதேனோ?

தலையைக்காத்த தாயாக உமக்கு நிம்மதி
தாயைக்காக்காத தலையாக எனக்கு நிர்க்கதி
உன்கடன் என்று தாலிக்கொடி தூக்கித்தந்தாய்
உன் கடன் செய்யாப் பாவியானேன் இனி என் செய்வேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் கோலமோ காலன் அவன் கட்டளையோ?
கண்ணீரில் எனைவிட்டு உன் மூச்சு தண்ணீரில் போச்சதம்மா
கடமைகள் முடிந்ததென்று கண்மூடித்தூங்கினாலும்
கடமைகள் செய்யாது தடுத்ததுதான் ஏனம்மா?

பெற்ற பிள்ளைகள் மட்டுமல்ல –உன்
பேரப்பிள்ளைகளும் உனக்குக் கடமை செய்யவில்லை
பெற்றபிள்ளைகள் பேரப்பிள்ளைகள் வேண்டுமென்று-நீ
பேதலிந்து தன்னும் எண்ணியிருக்க மாட்டாய் அம்மா

மூன்று வருடங்களிற்கு முன்பு உங்களை யான் பார்த்தேன்
முழுமனதாய் உன் வாரிசைக் காத்தாய் கண்டேன்
முகம் கழுவ என்பிள்ளை கிணற்றடிக்குச் சென்றால்
முன்னே நீ சென்று நிற்பாய் காவலாய்

என்பிள்ளை குடும்பத்தைப் பார்த்து எனக்கினி ஆசை ஒன்றுமில்லை
எல்லோரையும் பார்த்துவிட்டேன் போதுமென்று உரைத்தாய்
எல்லோரையும் பாரினிலே பரிதவிக்கவிட்டு
எங்கே போனீர்கள் என் அன்பு அம்மா!

(இளைய மகன் யோகன் அவர்களின் ஆக்கத்தில் உருவான கண்ணீர்க்கதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகன்மார் திரு.ச.சிதம்பரப்பிள்ளை திரு.ஜெயச்சந்திரன், ஆகியோர் இதயக்குமுறல்

பெற்ற பிள்ளை போலெம்மில் பேரன்பு கொண்டீர்கள்
பெருமையுற்று நாம் வாழப் பேருதவி செய்தீர்கள்
நித்தம் எமதுளத்தில் நிலையாக இருந்தீர்கள்
நீர் நிலந்தனைவிட்டு நீங்கிச்சென்றதேனோ?

## மருமகள்மார் திருமதி.ராஜினி வல்லிபுரம், (லண்டன்) திருமதி.கவுதாமணி கந்தசாமி (அவுஸ்ரேலியா) திருமதி. வைகுந்தராணி யோகராசா (சுவிஸ்) ஆகியோர் இதயக்குமுறல்.

பற்று மிகக்கொண்ட பண்புடைய மாமியரே
பறந்து வந்த செய்தி கேட்டு பதைபதைத்துப் போனோம்
உங்கள் முகம் காணாது உணர்விழந்து இம்மண்ணில்
அங்கமெலாம் சோர்வுற்று அவலமுடன் வாழ்கின்றோம்

## மருமகள்மார் திருமதி.செல்வராணி பாலசிங்கம் திருமதி. ஸ்ரெலாயோகராணி சுப்பிரமணியம் அவர்களின் இதயக்குமுறல்

பாசமுடன் அருகிருந்து பணிவிடைகள் செய்தவெம்
மனவுறுதி மிகக்கொண்ட மாண்புடைய மாமியரே!
வெந்தணல் மீது வீழ்ந்து வேதனை கொண்டது போல்
உங்கள் பிரிவு எம் உள்ளமதை வாட்டுதம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் சி.சுமித்திரா, சி.சுமித்திரன், சி.சுமந்தன் ஆகியோர் இதயக்குமுறல்

அள்ளி அணைத்தெடுத்து அன்புடன் அமுதூட்டி
சிரித்தமுகத்தோடு சீராட்டி எமை வளர்த்து
பெரியவராக்கி எம்மை பெரு மகிழ்வு மிகக்கொண்டு
அம்மம்மாவே உங்கள் அழகு முகம் காண்பதெப்போ?

## பேரப்பிள்ளைகள் வ.விக்கினராஜ், வ.வசீகரன், வ.விசாலினி (லண்டன்) ஆகியோர் இதயக்குமுறல்

அந்நிய நாடிருந்து அப்பம்மா முகம்காணவென்று
ஓடிவந்துங்கள் ஒளிமுகம் யாம் கண்டோம்
கட்டியணைத்து நீங்கள் களிப்பு மிகக் கொண்டீர்கள்
இன்றுங்கள் முகம் காண இங்கிருந்து ஏங்குகின்றோம்

## பேரப்பிள்ளை செல்வி.கஜந்தா கந்தசாமி (அவுஸ்ரேலியா) அவர்களின் இதயக்குமுறல்

பெரியவளாய் நான் வளர பெருமகிழ்வு நீ கொண்டாய்
இனிய நல்லன்புடனே இங்கிருந்து நான் மகிழ்ந்தேன்
இல்லறத்தில் நான் இணையும் இனிய நன்னாள் முந்தி
எங்குதான் சென்றீர்கள் என் அன்பு அப்பம்மாவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் யோ.விஸ்ணுதன்,யோ.விஸ்ணுகன், யோ.ஜகஜாலினி (சுவிஸ்) ஆகியோர் இதயக்குமுறல்

அப்பம்மா உமைக்காண அன்னிய நாடுவிட்டு நாம்
ஆவலாய் ஓடிவர அன்பு மழை பொழிந்து அகலாமல் நின்றீர்கள்
கிணற்றடிக்கு நாம் செல்ல கிலி நடுக்கம் கொண்டு நீங்கள்
கடுகதியாய் சென்றதெங்கே காவலாய் நின்றீர்கள்

தண்ணீரில் நாம் வீழ்ந்து தத்தளிப்போமென்று பயந்து
காவலாய் நின்ற எங்கள் கண்ணான அப்பம்மா
தண்ணீரில் தாழ்ந்திறைவன் தாள் அடி சேர்ந்தீர்கள்
கண்ணீரில் ஆழ்ந்திங்கு கலங்கித்தவிக்கின்றோம்.

பிறந்தநாள் தினத்தன்று பறந்தோடி வந்தெம்மை
பாராட்டிப்போற்றி பாசமதைக் காட்டினீர்கள்
இனிவரும் பிறந்தநாளை இனிதாகக் கொண்டாட
இம்மண்ணில் நீங்களில்லை இதை நினைக்கும்
போதெங்கள் இதயம் வெடிக்கிறது.

## பேரப்பிள்ளைகள் பா.சாருபன், பா.சாருகா, பா.சமீனா சு.இராசகுமார்,சு.ஜீவகுமார், சு.றஜீவ் ஆகியோர் இதயக்குமுறல்

அன்பு மிகக்கொண்டு அரவணைத்த அப்பம்மா
தேம்பியழும் போது தென்பு மிகத் தந்து
பாசமொடு எந்நாளும் பழகி வந்தீர்கள்
தேசம் விட்டுச் சென்றதினால் தேம்பியழுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார் உறவினர் இதயக்குமுறல்

நல்லுதவி பல நாடி வந்து செய்திடுவாய்
நலம் பெற்று யாமும் நானிலத்தில் வாழ்ந்து வந்தோம்
சேதி ஒன்றும் சொல்லாது சென்றதெங்கே சின்னம்மா
சொந்தத்தைப் பிரிந்திங்கு சோகத்தில் வாடுகின்றோம்

## தேற்றம்

உடல் அழியும் என்பதை உலகிலுள்ளோர் அறிவர்
உயிரோ அழியாது இன்னோர் உடல் சேரும்
அழியாத இவ்வுயிர்க்காய் ஆறாத்துயர் கொள்ளல்
அறியாமை என்பதனை அனைவரும் உணர்ந்திடுவோம்

**ஆக்கம்:- திரு.சி.பவளேந்திரன் - ஆசிரியர்**
**மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்.**

## *தகவல் இணையம்*
## *இலங்கையில் முதலாவது-------*

1. சுதந்திர இலங்கையில் முதல் ஜனாதிபதி
   சேர்.வில்லியம் கோபல்லாவ

2. சுதந்திர இலங்கையின் முதலாவது எதிர்க்கட்சித் தலைவர்
   என்.எம்.பெரோ

3. இலங்கையின் முதலாவது பிரதமர்
   டி.எஸ்.சேனநாயக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இலங்கையின் முதலாவது ஆளுநர்
பிரெடிக் நோத் (1798-1805)

5. இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி
ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

6. தேசாதிபதியாக கடமையாற்றிய முதல் இலங்கையர்
சேர்.ஒலிவர்.குணதிலக

7. இலங்கையின் தேசிய காங்கிரஸ் அரசியல் கட்சியின் முதல் தலைவர்
சேர்.பொன்னம்பலம் அருணாசலம்

8. இலங்கையின் முதலாவது செய்தித்தாள்
கொழும்பு ஜேணல்

9. இலங்கையில் வெளிவந்த முதலாவது தமிழ் செய்தித்தாள்
உதயதாரகை

10. இலங்கையின் முதலாவது பெண்கள் பாடசாலை
உடுவில் மகளிர் கல்லூரி

11. இலங்கையின் பல்கலைக்கழக துணைவேந்தராக முதன்முதல் பதவி வகித்த இலங்கையர்
சேர்.நிக்கலஸ் ஆட்டிக்கல

12. இலங்கையின் முதலாவது தமிழ்ப் பேராசிரியர்
முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்

13. இலங்கையின் முதலாவது தமிழ் இலக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. இலங்கையின் முதலாவது பல்கலைக்கழகம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

15. இலங்கையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வகித்த முதலாவது சிறுபான்மை இனத்தவர்
அ.அமிர்தலிங்கம்

16. இலங்கையின் முதலாவது பெண் பிரதமர்
சிறிமாவோ பண்டாரநாயக்கா

17. இலங்கையில் முதல் தயாரிக்கப்பட்ட படங்கள்

| | |
|---|---|
| சிங்களம் | - கருவுன பொறந்துவ |
| தமிழ் | - தோட்டக்காரி |
| ஆங்கிலம் | - It is a matter of time |

18. இலங்கையில் வெளிவந்த முதலாவது சிங்கள பத்திரிகை
சிங்கள ஹறட

19. இலங்கையின் முதன் முதல் சனத்தொகைக் கணக்கெடுப்பு நிகழ்ந்த ஆண்டு
1871

20. இலங்கையை ஆழிப்பேரலை (Tsunami) தாக்கிய ஆண்டு
2004.12.26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில்

# பெரியவை, முக்கியமானவை

இலங்கையில் உள்ள பெரிய மலை
பேதுறுதாலகாலமலை

இலங்கையில் உள்ள மிக நீண்ட நதி
மகாவலிகங்கை

மிகப்பெரிய நீர்த்தேக்கம்
பம்பரகந்த

மிகப்பெரிய மாவட்டம்
அனுராதபுரம்

மிகச்சிறிய மாவட்டம்
கொழும்பு

அதிகம் சனத்தொகை கொண்ட பிரதேசம்
காத்தான்குடி

அதிக மழை வீழ்ச்சி கொண்ட பிரதேசம்
வட்டவளை

சனத்தொகை குறைந்த பிரதேசம்
மன்னார்

அதிக வெப்பம் கூடிய பிரதேசம்
மன்னார் (மறிச்சுக்கட்டி)

இலங்கையில் பெரிய பாலம்
Ntyiz – புங்குடுதீவுப் பாலம் (3 மைல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜனவரி | 12 | தேசிய இளைஞர் தினம் |
| 2. | ஜனவரி | 15 | இராணுவ தினம் |
| 3. | ஜனவரி | 26 | குடியரசு தினம் ச்நவதேச கஸ்டமஸ்தினம் |
| 4. | பெப்ருவரி2 | 8 | தேசிய அறிவியல் தினம் |
| 5. | மார்ச் | 08 | சர்வதேச பெண்கள் தினம் |
| 6. | மார்ச் | 15 | உலகஊனமுற்றோர் தினம் |
| 7. | மார்ச் | 21 | உலக தினம் |
| 8. | ஏப்ரல் | 07 | உலக ஆரோக்கிய தினம் |
| 9. | ஏப்ரல் | 22 | பூமி தினம் |
| 10. | மே | 01 | தொழிலாளர் தினம் |
| 11. | மே | 03 | பத்திரிகை சுதந்திர தினம் |
| 12. | மே (இரண்டாம் ஞாயிறு) | | உலக செஞ்சிலுவை தினம் |
| 13. | மே | 15 | சர்வதேச குடும்ப தினம் |
| 14. | மே | 17 | உலக தகவல் தொடர்பு தினம் |
| 15. | மே | 24 | காமன் வெல்த் தினம் |
| 16. | மே | 31 | புகையிலை எதிர்ப்பு தினம் |
| 17. | ஜுன் | 05 | உலக சுற்றுச்சூழல் தினம் |
| 18. | ஜுன் | 27 | உலக நீரிழிவாளர் தினம் |
| 19. | ஜுலை | 11 | உலக மக்கள் தொகை தினம் |
| 20. | ஆகஸ்ட் | 06 | ஹிரோசிமா தினம் |
| 21. | ஆகஸ்ட் | 09 | வெள்ளையனே வெளியேறு தினம், -நாகசாகி தினம் |
| 22. | ஆகஸ்ட் | 15 | சுதந்திர தினம் |
| 23. | ஆகஸ்ட் | 29 | தேசிய விளையாட்டு தினம் |
| 25. | செப்டெம்பர் | 08 | உலக எழுத்தறிவு தினம் |
| 26. | செப்டெம்பர் | 16 | உலக ஓசோன் தினம் |
| 27. | செப்டெம்பர் | 26 | காதுகேளாதோர் தினம் |
| 28. | செப்டெம்பர் | 27 | உலக சுற்றுலா தினம் |
| 29. | அக்டோபர் | 01 | உலகமுதியோர் தினம் |
| 30. | அக்டோபர் | 03 | உலக குடியிருப்பு தினம் |
| 31. | அக்டோபர் | 04 | உலக விலங்கு நல தினம் |
| 32அ | க்டோபர் | 06 | ஆசிரியர் தினம் |
| 33. | அக்டோபர் | 08 | இந்திய விமானப்படை தினம் |
| 34. | அக்டோபர் | 09 | உலக தபால் நிலைய தினம் |
| 35. | அக்டோபர் | 10 | தேசிய தபால் தினம் |
| 36. | அக்டோபர் | 14 | உலக தர தினம் |
| 37. | அக்டோபர் | 16 | உலக உணவு தினம் |
| 38. | அக்டோபர் | 24 | ஐக்கிய நாடுகள் தினம் |
| 39. | நவம்பர் | 14 | குழந்தைகள் தினம் |
| 40. | டிசம்பர் | 01 | உலக எயிட்ஸ் தினம் |
| 41. | டிசம்பர் | 04 | கடற்படை தினம் |
| 42. | டிசம்பர் | 10 | மனித உரிமை தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் அன்புத் தெய்வம் அன்னை திருமதி வயிரவிப்பிள்ளை
சின்னம்மா அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு
ஓடோடி வந்து உதவி பல செய்த உற்றார், உறவினர்
நண்பர்களுக்கும், அன்னாரின் இறுதிக்கிரிகைகளில்
பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள்,
ஆசிரியர், அதிபர்களுக்கும், கடிதங்கள், தொலை பேசிமூலம்
தொடர்பு கொண்டு எம் துயரில் பங்கு கொண்டோருக்கும்,
அந்தியேட்டி சபிண்டீகரணைக் கிரியைகளை நடத்திய ஆச்சாரியப்
பெருந்தகைகளுக்கும், இந்நிகழ்வில் கலந்து கொண்ட உற்றார்,
உறவினர், நண்பர்களுக்கும், இந்நூலை ஆக்கிய
ஆசிரியருக்கும், அழகுற அச்சிட்டு உதவிய சிவகஜன்
அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.

## ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உசன்,
மிருசுவில

இங்ஙனம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுஜன் பதிப்பகம், கொழும்பு - T.P - 0777 273607